**செய்தி வெளியீடு** **நாள் : 01.09.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் மற்றும் கொண்டித்தோப்பு இரத்த சுத்திகரிப்பு நிலையங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து வசதிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (01.09.2025) **சென்னை,** தாளமுத்து நடராஜன் மாளிகையிலுள்ள **சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் **கொளத்தூர் மற்றும் கொண்டித்தோப்பு இரத்த சுத்திகரிப்பு நிலையங்களை (Kolathur & Kondithoppe Dialysis Centres)** மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து வசதிகள் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அப்பல்லோ மருத்துவமனை குழும நிர்வாக துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா ரெட்டி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., தலைமை திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, மாநகராட்சி மாநகர நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™